# இந்திய இலங்கை மன்றம்

## ஊடக அறிக்கை

**<u>இந்திய - இலங்கை மன்றத்தின் 40 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது</u>**

இந்திய இலங்கை மன்றத்தின் 40 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம் 2025 செப்டெம்பர் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இந்த அமர்வானது இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் கௌரவ மஹிஷினி கொலன்னே ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது. இம்மன்றத்தின் உறுப்பினர்கள் தூதுவர் மோகன் குமார், திரு அஷோக் மாலிக், தூதுவர் பிரசாத் காரியவசம் மற்றும் தூதுவர் எசல வீரக்கோன் ஆகியோரும் இந்த அமர்வில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2. இம்மன்றத்தின் கொழும்பு மற்றும் புதுடில்லி செயலகங்களால், கலாசாரம், கல்வி, சுகாதாரம், சூழல், விவசாயம், மற்றும் ஆளுமை விருத்தி உள்ளிட்ட பல துறைகளிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய பல திட்ட முன்மொழிவுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுடன், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து மீளாய்வும் செய்யப்பட்டது. புதிதாக அங்கீகரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளில் நூலக விஞ்ஞானம் மற்றும் ஆற்றுகை கலைகள் போன்ற துறைகளில் கல்வி ரீதியான ஒத்துழைப்பு, இரு நாடுகளிலும் கலாசார பயிலமர்வுகள், மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு செயற்பாடுகள், இலங்கையில் தாவர நோய்களை தடுப்பதற்கான நுண்ணுயிரியல் பொறியியல் ஆராய்ச்சி, நலிவான சமூகங்களுக்கான புற்றுநோய் மற்றும் மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு திட்டங்கள், இந்தியாவில் இலங்கை சுகாதார நிபுணர்களுக்கான பயிற்சிகள், பெண்களுக்கு அதிகாரமளித்தல் பயிலமர்வுகள் மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கான ஆதரவு திட்டங்கள், துறைசார் மேம்பாட்டுக்காக மீன்பிடித் துறை அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் சதுப்புநில மறுசீரமைப்பு திட்டங்களுடன் விஞ்ஞானம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் அறிவுப் பகிர்வு திட்டங்கள் உள்ளிட்டவை அடங்குகின்றன.

3. பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாசார ஒத்துழைப்பு, மற்றும் இரு நாடுகளினதும் மக்களிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துதல் ஊடாக இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக்கும் நோக்கத்துடன் இந்திய இலங்கை மன்றமானது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலமாக 1998ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பம் முதல் இதுவரை இம்மன்றத்தினால் இலங்கை ரூபா 200 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான 600 திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதுடன் இதில் 360 திட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

****

**கொழும்பு**
**20 செப்டெம்பர் 2025**